## பன்னிரு திருமுறைகள்...

சிவபெருமானை முழுமுதல் தெய்வமாகப் போற்றுவது சைவ சமயம். சைவ சமய வளர்ச்சிக் காலத்தில் பன்னிரு திருமுறைகள் கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், சைவ சித்தாந்த சாத்திரங்கள் தலபுராணங்கள் முதலானவை தோற்றம் பெற்றன.

**சைவத்திருமுறைகள்:**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும். இவற்றை அருளியவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் ஆவர். 10-ம் திருமுறை திருமூலரின் திருமந்திரம் ஆகும். 11-ம் திருமுறை 12 அருளாளர் பாடிய நாற்பது நூல்களின் தொகுப்பாக உள்ளது. சேக்கிழார் அருளிய பெரியபுராணம் 12-ம் திருமுறையாகும்.

**1, 2, 3 - ஆம் திருமுறைகள் (திருஞானசம்பந்தர் - 'திருக்கடைக்காப்பு').**

திருஞானசம்பந்தரின் பாடல்கள் முதல் மூன்று திருமுறையாக விளங்குகின்றன. 16000 பதிகங்கள் பாடி, இன்று 3840 பாடல்களே கிடைத்துள்ளன. 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' எனச் சுந்தரரால் போற்றப்படுகின்றார்.

இயற்கை வருணனைகளைச் சிறப்புடன் அமைத்துப் பாடுவது இவரது தனிச்சிறப்பாகும் 'நாளும் கோளும் நல்லவர்க்கில்லை' என்ற இவரது புதுமைச் சிந்தனை சிறப்புடையது.

**4, 5, 6 ஆம் திருமுறைகள் (தேவாரம் - 'திருநாவுக்கரசர்').**

இவை திருநாவுக்கரசரால் பாடப்பட்டவை. 'வாகீசர்', 'அப்பர்', 'தாண்டகவேந்தர்' என்று சிறப்பிக்கப்படுபவர் இவர். நாவுக்கரசர் பாடியவை 49000 பாடல்கள்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவர் கொள்கை. மனித இனமே ஒன்று என்னும் மாண்பு படைத்தவர்.

7 - ஆம் திருமுறை (சுந்தரர் - 'திருப்பாட்டு').

ஏழாம் திருமுறையைப் பாடியவர் சுந்தரர். நம்பி ஆரூரர், ஆளுடை நம்பி, தம்பிரான் தோழர் என்ற வேறு பெயர்களும் இவருக்குண்டு.

இறைவனின் அடியார்களின் வரலாற்றினைத் 'திருத்தொண்டத்தொகை' என்ற நூலைப் பாடியவர். இந்நூல் சேக்கிழார் பெரிய புராணம் பாட அடிப்படையாக அமைந்தது.

இவரது முதல் 'பாடல் பித்தா பிறை சூடி' என்று இறைவனை அழைப்பதாக உள்ளது.

8 - ஆம் திருமுறை (மாணிக்கவாசகர் - திருவாசகம், திருக்கோவையார்)

திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை எனப்படுகின்றன. இவற்றைப் பாடியவர் மாணிக்கவாசகர்.

வெளிநாட்டுக் கிறித்துவ அறிஞர் ஜி.யு. போப்பின் உள்ளம் கவர்ந்த நூல் இது. இதனை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

திருவாசகம் தமிழ் வேதம் எனவும் போற்றப்படுகிறது.

10 - ஆம் திருமுறை (திருமூலர் - திருமந்திரம்):

திருமந்திரம் 10-ம் திருமுறையாகும். இதனை இயற்றியவர் திருமூலர். இவர் சைவ சித்தாந்தத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

தமிழின் சிறந்த இலக்கியங்களின் பட்டியலில் இந்நூலும் இடம்பெற்றுள்ளது.

திருமந்திரம் ஒன்பது பிரிவுகளைக் கொண்டது. திருமூலர் அரிய கருத்துக்கள் பலவற்றை எளிய முறையில் தந்துள்ளார்.

### 11 - ஆம் திருமுறை (பிரபந்தத் திருமுறை):

காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி என்னும் 11 அடியார்கள் பாடிய 30 சிற்றிலக்கியங்களின் தொகுப்பு 11-ம் திருமுறை ஆகும்.

11-ம் திருமுறைக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் பட்டினத்தார் ஆவார்.

### 12 - ஆம் திருமுறை (சேக்கிழார் – 'பெரியபுராணம்'):

பெரிய புராணம் 12-ம் திருமுறையாகும். இதன் ஆசிரியர் சேக்கிழார். இவர் கி.பி. 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். பெரிய புராணம் சைவ அடியார்களின் வரலாற்றைப் பாடுவது. இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர்புராணம்' என்பதாகும்.

## பன்னிரு ஆழ்வார்கள்:

### 1) பொய்கையாழ்வார்:

காஞ்சிபுரத்தில், தாமரைப் பொய்கையில் தோன்றி பொய்கையாழ்வார் எனும் பெயர் பெற்றார். இவரது பாடல்கள் முதல் திருவந்தாதி எனப்படுகின்றன. இப்பாடல்கள் அந்தாதித் தொடையிலும் நேரிசை வெண்பா யாப்பிலும் அமைந்தவை.

### 2) பூதத்தாழ்வார்:

மாமல்லபுரத்தில் பிறந்தவர். பூதம் என்னும் சொல்லைக் கையாண்டு கவிபாடியதால் பூதத்தாழ்வார் எனும் பெயர் பெற்றார். இவரது பாடல்கள் 2 ஆம் திருவந்தாதி ஆகும்.

இவை ஞானத்தமிழ்ப் பாடல்கள். அந்தாதித் தொடையிலும் வெண்பா யாப்பிலும் அமைந்தவை.

3) பேயாழ்வார்:

இவர் மயிலாப்பூரில் பிறந்தவர். இறைவன்மீது பேய் கொண்டாற் போல அன்பு பூண்டு பேயாழ்வார் என்று பெயர் பெற்றவர். இவரது பாடல்கள் மூன்றாம் திருவந்தாதி எனப்படுகின்றன.

இம்மூவரும் முதலாழ்வார்கள் என்று வைணவ சமயத்தவரால் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் காலம் ஆறாம் நூற்றாண்டு.

4) திருமழிசை ஆழ்வார்:

இவர் திருமழிசைப் பிரான். பக்திசாரர் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறார். திருமழிசையில் பிறந்தவர். திருமாலின் சுதர்சன சக்கர அம்சமாகப் பிறந்தவர் என்பர். சைவத்திற்குத் திருமூலர் போன்று வைணவத்திற்குத் திருமழிசையாழ்வார் திகழ்ந்தார். இவரது காலம் கி.பி. ௭ ஆம் நூற்றாண்டு ஆகும்.

5) பெரியாழ்வார்:

திருவில்லிபுத்தூரில் தோன்றிய அந்தண மரபினர். கருடனின் அம்சமாகப் பிறந்தவர். விஷ்ணுசித்தன் என்பது இயற்பெயர். பட்டர்பிரான் என்று வைணவர்கள் போற்றுவர். இவரது காலம் கி.பி. ௯ ஆம் நூற்றாண்டு ஆகும். பெரியாழ்வார் 4௭3 பாசுரங்களைப் பாடியுள்ளார்.

6) ஆண்டாள்:

இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு. திருவில்லிபுத்தூரில் துளசிச் செடியின் அடியில் பிறந்தவர். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். திருமகளின் அம்சம். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, சூடிக்கொடுத்த நாச்சியார், ஆண்டாள் என பக்தியுடன் அழைக்கப்படுகிறார்.

7) திருமங்கையாழ்வார் :

இவர் சோழநாட்டுத் திருக்குறையலூரில் திருமாலின் வில்லின் அம்சமாகப் பிறந்தவர். அன்று தொடங்கி ஆன்மிக வாழ்வில் முதிர்ச்சி பெற்ற ஞானியாகவும் பெரும் புலவராகவும் விளங்கினார். இவரது காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு ஆகும்.
இவர் 1253 பாசுரங்களைப் பாடியுள்ளார்.

8) குலசேகராழ்வார் :

இவர் சேர மன்னர். திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர். திருமாலின் கௌஸ்துப மணியின் அம்சமாகப் போற்றப்படுகிறார். இவரது காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு. இவரது 105 தமிழ்ப் பாசுரங்களும் 'பெருமாள் திருமொழி' என்று கூறப்படுகின்றன.

9) தொண்டரடிப்பொடியாழ்வார் :

இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். திருமாலின் வனமாலை அம்சமாகத் தோன்றியவர். இவரது இயற்பெயர் விப்ரநாராயணன். இவர் 55 பாசுரங்களைப் பாடியுள்ளார். அவை திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்னும் இரு சிற்றிலக்கியங்களாக உள்ளன.

10) திருப்பாணாழ்வார் :

இவர் உறையூரில் பிறந்தவர். திருமாலின் ஸ்ரீவத்சம் என்னும் மச்சத்தின் அம்சமாகப் பிறந்தவர். பெருமாள் மீது 'அமலனாதிபிரான்' எனத் தொடங்கும் 10 பாசுரங்களைப் பாடினார். இப்பாடல்களில் பெருமாளின் திருக்கோலம் பாதாதி கேசமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அரங்கநாதனை முழுமையாக அருகில் காணும்பேறு பெற்ற மகிழ்வில் ஆழ்வார்.

11) நம்மாழ்வார் :

திருவரங்கப்பெருமானால் 'நம் சடகோபன்' என்று அழைக்கப்பட்டவர். எனவே வைணவர்கள் இவரை நம்மாழ்வார் என்று உரிமையுடன் போற்றுகின்றனர். இவர் மாறன், பராங்குசன், காரிமாறன், தமிழ்மாறன், வகுளாபரணன் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.

இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்னும் திருக்குருகூரில் பிறந்தவர். இவர் திருமாலின் அம்சமாகக் கருதப்படுகிறார்.

12) மதுரகவியாழ்வார் :

இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆழ்வார் திருநகரியை அடுத்த திருக்கோளூரில் கருடன் அம்சமாகப் பிறந்தவர். செவிக்கு இனிமையாக மதுரமாகப் பாட வல்லவர் என்பதால் மதுரகவி ஆழ்வார் எனப்பட்டார். நம்மாழ்வாரின் மாணவர். இவர் நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கருதிப் போற்றியவர். இதனை,

"தேவு மற்று அறியேன்; குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே!"

என்ற பாடல் விளக்கும். அவரைப் புகழ்ந்து 11 பாசுரங்களைப் பாடினார். அவை 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்று கூறப்படுகின்றன.

---